| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | | |
| மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **24/01/2024** | முதல் | **28/01/2024** | |
| அறிக்கை எண் : | **007/ 2024** | வெளியீட்டு நாள் : | **23/01/2024** | | | |

### சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19° - 21° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை** (18.01.2024 **முதல்** 22.01.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –28-01-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18/01 | 19/01 | 20/01 | 21/01 | 22/01 | தேதி | நாள்-1 24/01 | நாள்-2 25/01 | நாள்-3 26/01 | நாள்-4 27/01 | நாள்-5 28/01 |
| 0.0 | 0 | 0.1 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 32 | 32 | 32 | 33 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 32 | 32 | 32 | 32 | 32 |
| 21 | 18 | 18 | 20 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 24 | 24 | 24 |
| 5 | 2 | 3 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 4 | 1 | 1 | 7 |
| 87 | 83 | 67 | 77 | 83 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 55 | 43 | 46 | 43 | 53 | | 50 | 50 | 40 | 40 | 40 |
| 8 | 8 | 11 | 7 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 8 | 14 | 20 | 18 |
| கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

### குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவும். அதிகாலை நேரங்களில் மூடுபனி காணப்பட வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23°-24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவானது முதல் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 20 கி.மீ வேகத்தில் வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

அடுத்த 5 நாட்களுக்கு மாவட்டத்தில் வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு, எனவே விவசாயிகள் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். உங்கள் நிலத்தில் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் காய்கறி பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும். அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவ வாய்ப்புள்ளதால், உங்கள் கால்நடைகளை சூரிய உதயத்திற்கு 2 மணி நேரத்திற்குப் பிறகு மட்டுமே மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும்.

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (24 ஜன - 01 பிப்பாவரி 2024):

**மழைப்பொழிவு :**

24-01-2024 - 01-02-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளது

**அதிகபட்ச வெப்பநிலை :**

24-01-2024 - 01-02-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

24-01-2024 - 01-02-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக ; ஒட்டியே காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

## முக்கிய பயிர்கள் : மிளகாய், வெண்டை, கால்நடை

### வெண்டை:

வெண்டை பயிரைத் தாக்கும் செந்நாவாய்ப் பூச்சியின் தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இதன் காரணமாக தாக்கப்பட்ட காய்களின் விதைகள் நிறம் மாறியும், சுருங்கியும் காணப்படும். தாக்கப்பட் வயல்களில் ஹார்பேக்டர் காஸ்டாலிஸ் என்ற இறை விழுங்கிகளை விட்டு செந்நாவாய்ப்பூச்சியை கட்டுப்படுத்தலாம்.

மேலும் ஒரு ஏக்கருக்கு 600 மில்லி என்ற அளவில் பிவேரியா பேசியானா தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.

### மா :

மாவில் பூ, பிஞ்சுகள் உதிர்வது மற்றும் காய்ப் பிடிப்புக்கும் திறனை அதிகரிக்க செய்வது முக்கியமானதாகும். என்.ஏ.ஏ என்ற வளர்ச்சி ஊக்கி மருந்தை 20 பி.பி.எம் என்ற அளவில் இரண்டு முறை தெளிக்க வேண்டும்.
இவ்வாறு தெளிப்பதால் பிஞ்சுகள் உதிர்வது தடுக்கப்பட்டு காய்ப்பிடிப்பு அதிகரிக்கும். பூ பூக்காத மரங்களுக்கு 1லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் யூரியா அல்லது 1லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் பொட்டாசியம் நைட்ரேட் என்ற விகிதத்தில் கரைசல் தயாரித்து ஏதேனும் ஒன்றை தெளிக்க வேண்டும்.

### கால்நடை:

நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் தங்களது கால்நடைகளுக்கு காணை நோய் வர வாய்ப்பு உள்ளது.

இந்நோயிலிருந்து தங்கள் மாடுகளை காப்பற்ற விவசாயிகள் ஜனவரி மாதத்தில் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களின் மாடுகளுக்கு கால்காணை வாய்க்காணை (கோமாரி) நோய்க்கான தடுப்பூசி மருந்தினைப் போட்டுக் கொள்ளவும்.